தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

₹5/- மலர் 12 இதழ் 12 ஏப்ரல் 2011

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை



கல்விச் சிறப்பிதழ்

கற்கை நன்றே... கற்கை நன்றே...

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகளில் ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர்.

அவர்களுக்குப் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு ஏற்ற வேலை வாய்ப்புகளும், வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு சுய தொழில் தொடங்கவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.

மகளிர் பொருளாதார ரீதியாகச் சுய சார்பு பெற்றுத் தங்களின் சொந்தக்காலில் நிற்கவும், தம்மைச் சார்ந்த சமூகத்தை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்கள் இன்று பெரிதும் உதவிகரமாக இருக்கின்றன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களையும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் முற்றம் மாத இதழ் வெளியிடப்படுகிறது.

பயனுள்ள செய்திகளைச் சேகரித்து, அனைத்து மகளிர் சுய உதவிக் குழு பெண்களும் அறியும் வண்ணம் அந்தச் செய்திகளைச் சென்றடையச் செய்வதே முற்றம் இதழின் முக்கிய நோக்கமாகும்.

அரசின் முக்கியச் செய்திகள், மாவட்டச் செய்திகள், குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் வெற்றிக் கதைகள், செயல்பாடுகள், குழுக்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்த விபரங்கள், விழிப்புணர்வுக் கட்டுரைகள், பொது அறிவுச் செய்திகள், தொடர்கதைகள், கவிதைகள், வரலாற்று கால மகளிர் குறித்த செய்திகள், மருத்துவக் குறிப்புகள், மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் பல்வேறு முக்கியத் தகவல்களை உள்ளடக்கி முற்றம் இதழ் மாதந்தோறும் வெளிவருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், அனைவருக்கும் பயன் தரும் செய்திகளைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் முற்றம் மாத இதழ் அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படும் இதழாகத் திகழ்கிறது.

எனவே இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட முற்றம் இதழின் வளர்ச்சிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களும், கூட்டமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

மேலாண்மை இயக்குநர்

> ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். மகளிர் பொருளாதார ரீதியாகச் சுய சார்பு பெற்றுத் தங்களின் சொந்தக்காலில் நிற்கவும், தம்மைச் சார்ந்த சமூகத்தை உயர்த்தவும் சுய உதவிக் குழுக்கள் இன்று பெரிதும் உதவிகரமாக இருக்கின்றன.

உள்ளே...

கடிதங்கள் – 3

மார்ச் மாத முற்றம் இதழ் மிகவும் அருமை யாக உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விபரங்கள்....

வெற்றிக் கதை – 4

பிற குழுக்களைச் சேர்ந்த மகளிர் சுய தொழில் மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருவதுடன் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் அளித்து வருகின்றனர்.

அட்டைப்படக் கட்டுரை – 6

வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்புகள் ஏராளமாய் உள்ளன. அதற்கேற்ப பயிற்சிகள் அளிக்கும் கல்வி நிறுவனங்களும் நம் நாட்டில் உள்ளன.

மாவட்டச் செய்திகள் – 18

குழுவின் உறுப்பினர்களிடம் இருந்து பிடி அரிசி பெறப்பட்டு ஏழை, எளிய சகோதரிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

உடல் நலம் – 24

நம்மைச் சார்ந்து வாழும் சகோதரிகளின் மன அழுத்தத்திற்கான விதை நம் வார்த்தைகளிலிருந்தோ, செயல்களிலிருந்தோ விழுந்து விடாமல் கவனமாய் இருப்பது ஆண்களின் கடமை.

வாழ்ந்து காட்டுவோம் – 27

வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் நடைபெற்ற பயிற்சிகள், சுய உதவிக் குழு நடவடிக்கைகள், கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் முன்னேற்றத்திற்கு பெரிதும்...

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 12 ஏப்ரல் 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பொறுப்பாசிரியர்
திரு. கோ. ஸ்ரீனிவாச ராவ்
மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

கல்வியைப் போற்றுவோம்!

அன்புள்ள வாசகர்களுக்கு,

பள்ளி கல்லூரிகளில் ஆண்டுத் தேர்வுகள் முடிந்து விட்டன. மாணவ மாணவிகள் தங்களின் மேற்படிப்பிற்கான கல்வியை தரும் கல்விக் கூடங்களை நாடிச் சென்று கொண்டிருக்கின்றனர். தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் பெற்றோர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

கல்விச்சிறப்பிதழாக உங்கள் கையில் தவழ்ந்து கொண்டிருக்கும் முற்றம் இதழில், மாணவச் செல்வங்களுக்கு உதவி புரியும் வகையில் பல்வேறு படிப்புகள் குறித்த விபரங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் வேலைவாய்ப்பு தரும் படிப்புகள் குறித்த கட்டுரை இடம்பெற்றுள்ளது.

நம் நாட்டின் எதிர்காலம் தங்களின் கையில்தான் உள்ளது என்பதை நினைவில் கொண்டு மாணவ மாணவிகள் தங்களுக்கு ஏற்ற கல்லூரியில் சேர்ந்து, சிறப்பாகப் பயின்று நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் தங்கள் பகுதியில் உள்ள மாணவ - மாணவிகள் கல்வி பெற ஊக்குவிப்பதுடன், அவர்களுக்கு தேவையான உதவிகளும் செய்திட வேண்டும்.

ஏப்ரல் மாதம் பிறந்து விட்டது, நிதியாண்டு ஆரம்பமாகி அனைவரும் அவரவர் குழுக்களின் வரவு - செலவு கணக்குளைச் சரிபார்த்துத் தணிக்கைக்குத் தயாராகிக் கொண்டிருப்பீர்கள். மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளரால் குழுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை உறுப்பினர்களுக்குக் காண்பித்து, வரவு - செலவு விபரங்களை விளக்கமாக எடுத்துக் கூற வேண்டும்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்படும் சந்தேகங்களைப் போக்கி இறுதி யாக அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். குழுக்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கான காரணங்களை ஆய்வு செய்து பார்த்ததில், பெரும்பாலான குழுக்களில் வரவு - செலவு கணக்குகள் சரியாகப் பராமரிக்கப்படாததால் தான் அதிகமான பிரச்சனைகள் எழுவது தெரிய வந்துள்ளது.

எனவே குழுக்கள் வரவு - செலவு கணக்குகளை முறையாக பராமரித்து, ஆண்டிற்கு ஒருமுறை தணிக்கை செய்வது தான் குழுவின் வளர்ச்சிக்கு உகந்தது என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுவோம்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

பாராட்டுக்கள் பல!

மாவட்டந்தோறும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளைத் தொடந்து வெளியிட்டு வரும் முற்றம் இதழிற்கு எங்களின் பாராட்டுக்கள் பல. மேலும் மேலும் பல புதிய பகுதிகளை வெளியிட்டு எங்களைப் போன்ற பெண்களுக்கு ஊக்கம் அளித்திட வேண்டும் என்று உரிமையுடன் முற்றம் இதழின் ஆசிரியர் குழுவினரைக் கேட்டுக் கொள்கிறோம். நன்றி வணக்கம்.

அன்புடன்,
திருமதி. கற்பகம் நெடுஞ்செழியன்
வானவில் மகளிர் சுய உதவிக் குழு,
மேட்டுத் தெரு, சேலம்.

மிகவும் அருமை!

மார்ச் மாத முற்றம் இதழ் மிகவும் அருமையாக உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விபரங்களும், அவைகள் கிடைக்கும் மாவட்டங்களின் விபரங்களும், மாவட்ட விற்பனைச் சங்கங்களின் முகவரிகளும் எங்களைப் போன்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமல்லாது அனைவருக்கும் மிகவும் பயன் தரும் ஒன்றாகும். மேலும் மகளிர் திட்டம் குறித்த கவிதை சிறப்பாக இருந்தது.

வாழ்த்துக்களுடன்,
திருமதி. காந்திமதி ரவிச்சந்திரன்
தங்கமீன் மகளிர் சுய உதவிக் குழு,
குத்தனூர், காஞ்சிபுரம்.

வறுமை ஒழியட்டும்!

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் செயல்படும் வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களினால் கிராமப்புற மக்களின் வாழ்வில் வறுமை இருள் நீங்கி, வளமை ஒளி பெருகி வருகிறது என்பதை முற்றம் இதழின் மூலம் அறிந்து கொள்வதில் பெருமை கொள்கிறோம். மேலும் முற்றம் இதழில் இடம்பெறும் வண்ணப் படங்களும் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன.

என்றும் அன்புடன்,
திருமதி. லதா அய்யப்பன்,
ரோஜா மகளிர் குழு,
உடையார்பட்டி, திருநெல்வேலி.

மகளிர் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருக்கும் முற்றம் இதழிற்கு சந்தா செலுத்தி உறுப்பினர்களாகி முற்றம் இதழ் மேலும் மேலும் சிறப்பாய் வளர வாழ்த்துங்கள்!

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்கள் வரவேற்கப்படுகிறது.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

மூலிகைப் பொருட்களைத் தயாரிக்கும்

செல்வகணபதி மகளிர் சுய உதவிக் குழு

குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் கணக்கு துவங்கி அதில் வாரந்தோறும் தவறாமல் தங்களின் சேமிப்புத் தொகையைக் கட்டி வந்தனர். அத்தியாவசியத் தேவைகளுக்காகத் தங்களின் சேமிப்பின் மூலம் கிடைத்த தொகையில் உள்கடன் பெற்று முறையாகத் திரும்பச் செலுத்தினர்.

நாமக்கல் மாவட்டம், சின்னமுதலைப்பட்டியில் செயல்படும் செல்வகணபதி மகளிர் சுய உதவிக் குழுவானது கடந்த 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் நிர்வாகப் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

குழுவின் உறுப்பினர்கள் வங்கியில் கணக்கு துவங்கி அதில் வாரந்தோறும் தவறாமல் தங்களின் சேமிப்புத் தொகையைக் கட்டி வந்தனர். அத்தியாவசியத் தேவைகளுக்காகத் தங்களின் சேமிப்பின் மூலம் கிடைத்த தொகையில் உள்கடன் பெற்று முறையாகத் திரும்பச் செலுத்தினர்.

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஊக்கத்துடன் ஒன்று கூடி மிதியடிகள், ஆடை வகைகள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்து உள்ளூர் கடைகளில் விற்பனை செய்து வருகின்றனர். இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமானதாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் மக்கள் விரும்பி வாங்குகின்றனர். வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

பிற குழுக்களைச் சேர்ந்த மகளிர், சுய தொழில் மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருவதுடன், அவர்களுக்குப் பயிற்சிகளும் அளித்து வருகின்றனர். தங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காகப் பல்வேறு பொது நல அமைப்புகளிடமிருந்து பாராட்டுகளையும் பெற்றுள்ளனர்.

மேலும் மாற்றுத் திறனாளிகள், பெண்கள், ஆதரவற்றவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு, குழுவின் உறுப்பினர்கள் ஒன்று கூடி உதவிகள் பலவும் செய்து வருகின்றனர். சுற்றுப்புறச் சுகாதாரம், உடல் நலம், மருத்துவ உதவி போன்றவை குறித்த விழிப்புணர்வையும் தங்களது குழுவின் மூலம் பரப்பி வருகின்றனர். அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த பெண்கள், சுய உதவிக் குழுவினைத் தொடங்கி, தொழிற்பயிற்சிகள் பெற்று, சுய தொழிலினை மேற்கொண்டு அதன் மூலம் தங்களது குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தையும், குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தையும் தீர்மானிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செல்வ கணபதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர். ■

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஊக்கத்துடன் ஒன்று கூடி மிதியடிகள், ஆடை வகைகள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்து உள்ளூர் கடைகளில் விற்பனை செய்து வருகின்றனர். இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமானதாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் மக்கள் விரும்பி வாங்குகின்றனர் . வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

பரிசுப் பொருட்களின் உற்பத்தியில்

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து, பரிசுப் பொருட்கள், புடவை மற்றும் பெண்களுக்குத் தேவையான ஆடை வகைகள், மளிகைச் சாமான்கள், பினாயில், சோப் ஆயில் போன்றவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

சென்னை, கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரில் செயல்பட்டு வரும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினர் பல்வேறு வகையான பரிசுப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர் . நிர்வாகப் பயிற்சிகளையும், பரிசுப் பொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சிகளையும் இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டத்தின் மூலம் பெற்றுள்ளனர்.

மென் பொம்மைகள், பல்வேறு வண்ண கற்களில் உருவாக்கிய அழகிய ஆபரணங்கள், மங்கையர் மனம் விரும்பும் நவீன ரக பரிசுப் பொருட்கள், செல்போன் கவர்கள், அழகிய செயற்கைப் பூச்சாடிகள், தங்க மரம், கண்ணாடி ஓவியங்கள் போன்றவற்றை இக்குழுவின் உறுப்பினர்கள் உற்பத்தி செய்கின்றனர்.

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து, பரிசுப் பொருட்கள், புடவை மற்றும் பெண்களுக்குத் தேவையான ஆடை வகைகள், மளிகைச் சாமான்கள், பினாயில், சோப் ஆயில் போன்றவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருவதுடன், வெளிமாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் பங்கு பெற்று தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

சிறப்பாகச் செயல்படுவதற்காக இக்குழுவினர் பல்வேறு அமைப்புகளின் பாராட்டுக்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

மேலும் ஊனமுற்றோர், முதியோர், ஆதரவற்றோர் மற்றும் கர்ப்பிணிகளுக்கு உதவுதல், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் நடத்துதல், சுகாதார கழிப்பிடம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்குத் தேவையான உதவிகள் செய்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் சிறப்பான செயல்பாடுகளை அப்பகுதி மக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர் என்றால் அது மிகையாகாது. ■

மென் பொம்மைகள், பல்வேறு வகையான கற்களில் அழகிய பொருட்கள், மங்கையர் மனம் விரும்பும் வகையில் நவீன ரக பரிசுப் பொருட்கள், செல்போன் கவர்கள், அழகிய செயற்கைப் பூச்சாடிகள், தங்க மரம், கண்ணாடி ஓவியங்கள் போன்றவற்றை இக்குழுவின் உறுப்பினர்கள் உற்பத்தி செய்கின்றனர்.

கற்கை நன்றே... கற்கை நன்றே...

செல்வத்திலேயே சிறந்தது கல்விச் செல்வமே. "தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்ற அய்யன் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப கல்வி மட்டுமே மாந்தர்க்கு அனைத்து நலன்களையும் நல்கக் கூடியது. இவ்வுலகில் நடைபெறும் அனைத்து செயல்களும் சிறப்படைய கல்வியே முதற்கண் வழிவகுக்கிறது. தொடக்கக் கல்வி முதல் பல்வேறு துறையில் மேற்படிப்புகள் வரை பயின்றிட நமது நாட்டில் பல கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. அதற்கேற்ப பயிற்சி அளிக்கும் கல்வி நிறுவனங்களும் நம் நாட்டில் ஏராளமாய் உள்ளன. குறிப்பாக தமிழகத்தில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் பல்வேறு துறைகளுக்கும் தகுதி வாய்ந்தவர்களை உருவாக்கி வருகின்றன என்பதில் மிகையில்லை.

> "கல்வி மட்டுமே என்றும் அழியாதது. எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும். கல்விச் செல்வம் மட்டுமே மற்றவர்களுக்கு கொடுத்தாலும் குறையாதது. மற்றவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்க வளரக் கூடியது. யாராலும் களவாட முடியாதது. பெண்களுக்குக் கல்வி அறிவு கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அளிக்க முடியும். எனவே எப்பாடுபட்டாவது பெண்களுக்குக் கல்வி அறிவினை அளிக்க வேண்டும்."



பல்வேறு வகையான படிப்புகளை வழங்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் நமது மாநிலத்தில் அதிகளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்வதற்காக நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் வருகின்றனர்.

12ஆம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு முடித்த மாணவர்கள் அனைவருக்கும் இது முக்கியமான முடிவெடுக்கும் காலகட்டமாகும். இதில் +2 முடித்தவர்கள், தங்களுக்கு விருப்பமான பட்டப்படிப்பைப் பயில ஒரு முழுநேர கல்லூரியைத் தேடுகின்றனர். பட்டப் படிப்பை முடித்தவர்களோ, சிறந்த வேலை வாய்ப்பைத் தரக்கூடிய உயர் கல்வியை நாடுகின்றனர். இத்தகைய மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு படிப்புகள் குறித்து இவ்விதழில் காணலாம்.

மருத்துவம்

நோய்ப்பிணியிலிருந்து காப்பது மருத்துவர்களின் தலையாய பணியாகும். ஒருவர் மருத்துவராக வேண்டுமெனில் மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் படிப்பில், இளநிலைப் பட்டம் (எம்.பி.பி.எஸ்.) பெற்றிட வேண்டும். மருத்துவப் படிப்பில் சேர +2 படிப்பில் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். +2 தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கலாம். மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெற்றதும், தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்து விட்டு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவராகப் பணியாற்றலாம். சுயமாகவும் மருத்துவமனை நடத்தலாம். மருத்துவத்தில் மேற்படிப்பு படிக்க விரும்பினால்

மருத்துவத்துறையில் பல்வேறு வகையான படிப்புகள் உள்ளன. மருத்துவத்துறையில் சிறப்பான கல்வியை அளிக்கக் கூடிய ஏராளமான கல்வி நிலையங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.

மருத்துவத்துறை படிப்பு என்பது இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பொது மருத்துவம், பல் மருத்துவம், அறுவைச் சிகிச்சை குறித்த படிப்புகள், ஹோமியோபதி மருத்துவம் போன்றவை குறித்த படிப்புகளுக்கு மாணவர்களிடையே சிறப்பான வரவேற்பு உள்ளது.

எம்.டி., எம்.எஸ்., எம்.சி.எச்., போன்ற படிப்புகள் உள்ளன. இவைகளைப் படிப்பதன் மூலம் சிறந்த மருத்துவ நிபுணராக விளங்கலாம்.

பல் மருத்துவம்

பற்களைச் சீரமைப்பது, செயற்கைப் பற்களைப் பொருத்துவது, வாய் மற்றும் பல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பது, பல் நோய்களைக் குணப்படுத்துவது போன்றவை பல் மருத்துவத்தின் பணியாகும். பல் மருத்துவராக பி.டி.எஸ்., எனப்படும் பேச்சிலர் ஆஃப் டெண்டல் சர்ஜரி என்ற இளநிலைப் பட்டம் பெற வேண்டும்.

ஹோமியோபதி மருத்துவம்

கலை மற்றும் அறிவியல் சார்ந்த ஹோமியோபதி மருத்துவர் ஆக வேண்டுமெனில் ஹோமியோபதி மெடிசின் அண்ட் சர்ஜரி (பி.எச்.எம்.எஸ்.) என்ற இளநிலைப் பட்டம் பெற வேண்டும். இம்மருத்துவ முறையில் நோயாளிகளின் மனநிலையையும், உணர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுவதால் ஹோமியோபதி மருத்துவம் படித்தவர் மருத்துவர் மட்டுமல்ல, உளவியல் நிபுணருமாவார் என்பது சிறப்பு. மேலும் ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம், சித்த மருத்துவம் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அறிவியல் போன்ற படிப்புகளுக்கும் மருத்துவத் துறையில் சிறப்பான வேலை வாய்ப்புகள் உள்ளன.

ப;ல்வேறு நோய்களுக்கு மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை குறித்த படிப்புகளைக் கற்பிக்கும் கல்விக்கூடங்களில் சேர்ந்து பயில அயல்நாட்டு மாணவர்களும் விரும்புகின்றனர் என்பது நமக்குப் பெருமையான செய்தியாகும்.

மருத்துவத்துறையில் செவிலியர் பணி என்பது மிகவும் போற்றுதலுக்குரிய ஒன்றாகும். செவிலியர் பணி குறித்த பல்வேறு படிப்புகள் உள்ளன. மேலும் மருத்துவத்துறை உதவியாளர் குறித்த படிப்புகளும் ஏராளமாக உள்ளன.

செவிலியர் (நர்சிங்) படிப்புகள்

மன நிறைவு தருவதாலும், வேலை வாய்ப்பை எளிதில் பெற்றுத் தருவதாலும் நர்சிங் படிக்க விரும்பும் பெண்களின் எண்ணிக்கை நாளும் உயர்ந்து வருகிறது. செவிலியர் ஆக வேண்டுமென்றால் பி.எஸ்.சி. (நர்சிங்) பட்டப் படிப்பு, டிப்ளமோ இன் நர்சிங், சர்டிபிகேட் இன் நர்சிங், ஜெனரல் நர்சிங், ஜெனரல் நர்சிங் அண்ட் மிட்ஓய்ஃபரி, ஆண் செவிலியர் படிப்பு மற்றும் ஆக்சிலரி நர்சிங் அண்ட் மிட்வைஃபரி என்ற படிப்புகள் உள்ளன.

மேற்கண்ட படிப்புகள் மட்டுமல்லாது, ஃபிசியோதெரபி, எமர்ஜென்ஸிகேர் டெக்னீஷியன், ரெஸ்பிரேட்டரி தெரப்பி டெக்னிஷியன், அனஸ்தீசியா டெக்னீஷியன், தியேட்டர் டெக்னீஷியன், ஆர்த்தோபிடிக் டெக்னீஷியன், டிப்ளமோ இன் மெடிக்கல் லேப் டெக்னீஷியன், கார்டியாக் சோனோகிராபி டெக்னீஷியன், ஈ.சி.ஜி. / டிரெட் டெக்னீஷியன், பம்ப் டெக்னீஷியன், கார்டியாக் கேதீட்ரைசேஷன் லேப் டெக்னீஷியன் மற்றும் டயாலிசிஸ் டெக்னீஷியன் போன்ற படிப்புகளும் வேலை வாய்ப்புகளை எளிதில் பெற்றுத் தரும் படிப்புகளாகும்.

மருந்தியல் படிப்பு

நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் தக்க மருந்துகளைத் தருவதற்கு மருந்தியல் படித்தவர்கள் வேண்டும். பி.பார்ம்., டி.பார்ம்., போன்ற மருந்தியல் படிப்புகளைப் படிப்பதன்

மருத்துவம் சார்ந்த படிப்புகள் மட்டுமல்லாது மருத்துவத்துறைக்கு உதவியாகப் பல்வேறு பணிகளுக்கும் ஏற்ற படிப்புகள் ஏராளமாக உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்பவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் அதிகமாக உள்ளன.

நோயாளிகளுக்குத் தரப்படும் மருந்துகள் குறித்தும், அவைகளின் தன்மை குறித்தும் அறிந்து கொள்வதற்குப் பல்வேறு படிப்புகள் உள்ளன. அவைகள் அதிக வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருபவையாக உள்ளன.

மூலம் மருந்து விற்பனைப் பிரதிநிதிகள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருந்து ஆய்வகங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணி புரியலாம்.

பொறியியல் படிப்புகள்

தற்போது பொறியியல் படித்தவர்களின் தேவை அதிகமாக உள்ளதால் பொறியியல் படிப்பு எளிதில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் படிப்பாக உள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தமிழகம் முழுவதும் ஏராளமான பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் ஏறத்தாழ 50 விதமான பொறியியல் படிப்புகளில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானவர்கள் படித்து பட்டம் பெற்று வருகின்றனர். கணிப்பொறி அறிவியல், எலக்ட்ரானிக்ஸ், கம்யூனிகேஷன், எலக்ட்ரிகல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மெக்கானிக்கல் ஆகிய பிரிவுகளில் உள்ள பொறியியல் படிப்புகள் மிகவும் முக்கியமானவை ஆகும்.

பாலிடெக்னிக் படிப்புகள்

பாலிடெக்னிக் எனப்படும் பல்தொழில்நுட்பக் கல்வி, மூன்றாண்டு டிப்ளமோ படிப்பாகும். பாலிடெக்னிக் படிப்பை முடித்தவர்கள், பொறியியல் படிப்பில் இரண்டாம் ஆண்டிலிருந்து சேர்ந்து படிக்கலாம்.



மிகவும் எளிய முறையில் வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தரும் படிப்பாகப் பொறியியல் துறை சார்ந்த படிப்புகள் இன்று உள்ளன. ஏராளமானவர்கள் இன்று பொறியியல் பட்டதாரிகளாக உருவாகி வருகின்றனர்.

வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப, சிறந்த பணியாளர்களை உருவாக்கும் வகையில் தரமான தொழிற்பயிற்சிகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் இன்று நம் மாநிலத்தில் அதிகம் உள்ளன.

தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

நமது நாட்டில் தலைசிறந்து விளங்குபவை ஐ.ஐ.டி. எனப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களே. இங்கு படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்து விட்டால், எதிர்காலம் குறித்த கவலை எதுவும் தேவையில்லை. படிப்பை முடிக்கும் முன்பே வளாக நேர்முகத் தேர்வு மூலம் அதிக சம்பளத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தியாவில் மும்பை, கோரக்பூர், புதுதில்லி, சென்னை, கௌகாத்தி, ரூர்க்கி மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் ஐ.ஐ.டி. நிறுவனங்கள் உள்ளன.

வேளாண்மைக் கல்வி

நமது நாட்டின் முக்கியத் தொழிலே வேளாண்மைதான். இளங்கலை அறிவியல் (வேளாண்மை) என்ற படிப்பு வேளாண்மை குறித்த படிப்புகளில் முக்கியமானது. இது பெரும்பாலான வேளாண்மைக் கல்லூரிகளில் நடத்தப்படுகிறது.

பி.டெக். (வேளாண்மைப் பொறியியல்)

இயற்கை வளங்களை திறமையாகப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட, பொறியியல் அறிவை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்த இப்படிப்பை

நமது நாட்டின் முதுகெலும்பாக வேளாண்மை திகழ்ந்து வருகிறது. வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் வேளாண்மை குறித்த படிப்புகள், வேளாண்மைக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மையில் நவீன உத்திகளைப் புகுத்தும் வகையில் பல்வேறு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் கருவிகளிலும் புதுமைகள் புகுத்தப்பட்டு, உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

முடித்தவர்களுக்கு வேளாண்மைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், பண்ணை இயந்திரங்கள் செய்யும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

பி.டெக். (வேளாண்மை உயர் தொழில் நுட்பம்)

அண்மைக்காலமாகப் பிரபலமடைந்து வரும் வேளாண்மைப் படிப்பு இதுவாகும். அறிவியலில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றங்களைக் கொண்டு உயர் தொழில் நுட்பத்தை விவசாய மேம்பாட்டுக்குப் பயன்படுத்துவது குறித்த படிப்பு என்பதால் இப்படிப்பை மேற்கொள்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

பி.எஸ்.சி., (உணவு பதப்படுத்தும் அறிவியல்)

அறிவியல் தொழில் நுட்பங்களின் உதவியுடன் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தும் முறை குறித்த படிப்பு இதுவாகும்.

கால்நடை மருத்துவ அறிவியல்

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கவும், கலப்பினக் கால்நடைகளை உருவாக்கவும், கால்நடை மருத்துவ அறிவியல்

சுவையும், சுகாதாரமும் மிகுந்த உணவுப் பொருட்களைத் தயாரித்தல், பதப்படுத்துதல் ஆகியவை உணவுப் பதப்படுத்தல் குறித்த படிப்புகளில் கற்றுத் தரப்படுகின்றன. இப்படிப்புகளை அளிக்கும் கல்வி நிறுவனங்கள் நம் நாட்டில் ஏராளமாக உள்ளன.

மூன்று புறமும் அலைகடல் கொண்ட நம்நாட்டில் கடல் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி அதிகரித்த வண்ணம் உள்ளன. அவைகளுக்கு ஏற்ற கல்வியினைக் கற்றுத் தரும் கல்லூரிகளும் ஏராளமாக உள்ளன.

கல்வி அவசியமாகிறது. தமிழகத்தில் சென்னை மற்றும் நாமக்கல்லில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகள், தூத்துக்குடியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி போன்றவைகளில் கால்நடை மருத்துவப் படிப்பு உள்ளது.

கடல் சார்ந்த கல்வி

கடலியல், கப்பல் பணிக் கல்வி, கப்பல் பொறியியல் போன்ற கடல் சார்ந்த படிப்புகளைப் பரங்கிப்பேட்டையில் உள்ள கடல் வாழ் உயிரின மேனிலை ஆராய்ச்சி மையம் மற்றும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் படிக்கலாம்.

சட்டக் கல்வி

தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் தனியார் சட்டக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டம் பெற்ற பின் சட்டக் கல்லூரியில் சேரலாம். மூன்றாண்டுகளில் 30 பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பி.ஜி.எல். பட்டம் வழங்கப்படும். +2 படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், ஐந்தாண்டு சட்டப் படிப்பில் சேரலாம். முதல் மூன்றாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பி.ஏ., (சட்டம்) பட்டமும், மேலும் இரண்டாண்டுகள்

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற வாக்கிற்கு ஏற்ப, சட்டம் மற்றும் அது தொடர்பான கல்வியைக் கற்றுத் தரும் கல்விக் கூடங்களில் ஏராளமானவர்கள் பயின்று வருவது நம் நாட்டின் சட்டத்துறைக்குப் பெருமையாகும்.

இன்று அனைத்துத் துறைகளிலும், கணிப்பொறி முக்கிய இடத்தினை வகித்து வருகிறது. எனவே கணிப்பொறி சார்ந்த படிப்புகள் இன்று ஏராளமான வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் உள்ளன.

படித்துத் தேர்ச்சி பெற்றவுடன் பி.எல். பட்டமும் வழங்கப்படும். சட்டத்தில் ஹானர்ஸ் பட்டம் பெற 5 ஆண்டுகளில் 55 பாடங்களைப் பயின்று தேர்ச்சி பெற வேண்டும்.

கலை மற்றும் அறிவியல் படிப்புகள்

+2 படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு ஆர்வத்துடன் முன்வர வேண்டும். கலைப் படிப்புகளில் தற்போது பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பிருந்த பாடப் பிரிவுகளை மாற்றிவிட்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரக்கூடிய புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் ஏராளமாகச் செயல்பட்டு வருகின்றன.

பொறியியல் கல்லூரிகளில் நடைபெறுவது போல, கலைக் கல்லூரிகளிலும் தொழில் நிறுவனங்களின் வளாகத் தேர்வு (கேம்பஸ் இண்டர்வியூ) நடத்தப்பட்டு, மாணவ – மாணவியர், படித்து முடித்தவுடனே பணி ஆணையைப் பெற்று விடுகின்றனர். எனவே வேலைவாய்ப்புத் தரும் பாடப் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து, நன்கு படித்து, நல்ல மதிப்பெண்களையும், உடனடி வேலைவாய்ப்பையும் பெறலாம்.

கலை மற்றும் அறிவியல் பாடத் திட்டங்களில் குறிப்பிட்ட சில பாடங்களைப் பயின்றால் எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் அப்படிப்புகளில் சேர மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அத்தகைய பாடத் திட்டங்கள் இன்று பெருவாரியான கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

இன்று உலகில் உள்ள கணிப்பொறி வல்லுநர்களில் தலைசிறந்தவர்கள் நமது நாட்டின் கல்வி நிலையங்களில் பயின்றவர்கள் என்பது நமக்குப் பெருமையான ஒன்றாகும். இன்று கணிப்பொறி சார்ந்த படிப்புகள், நமது நாட்டில் ஏராளமான கல்வி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது.

தகவல் தொழில் நுட்பத்துறையில் கணினி சித்திர வரைகலை படிப்பு மிகவும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. கலையும் அறிவியலும் சங்கமிக்கும் இத்துறை சார்ந்த படிப்புகள் இளைஞர்கள் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றன.

இளங்கலை அறிவியல் காட்சித் தகவலியல்

மீடியா என்று அழைக்கப்படும் பத்திரிக்கைகள், சினிமா, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகிய அனைத்திற்குமான நுழைவு வாயில் விஸ்காம் எனப்படும் காட்சித் தகவலியல் படிப்பாகும். இதில் ஓவியம், புகைப்படக்கலை, குறும்படம், நாடகம், சினிமா, வீடியோ, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகியவற்றோடு இதழியல் குறித்த பாடமும் கற்றுத் தரப்படுகிறது. படிப்பின் இடையில் செயல் திட்டமும் உண்டு.

உயிர்த் தொழில் நுட்பம்

வருங்காலத்தில் உலகத்தை ஆளப்போவது உயிர்த் தொழில் நுட்பம் எனப்படும் பயோடெக்னாலஜி துறையாகும். தாவர மற்றும் விலங்கு செல்கள், கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா, பூஞ்சைகள், ஈஸ்ட், வைரஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன்படும் புதிய பொருட்களை உருவாக்குவது இத்துறையாகும். மேலும் நுண்ணுயிரியல், உயிர்த் தகவலியல், உயிர் வேதியியல், புவியியல், ஜியாலஜி, மனையியல், உணவுத் தொழில் நுட்பம், ஊட்டச் சத்து மற்றும் உணவுக் கட்டுப்பாட்டுக் கல்வி, ஹோட்டல் மேலாண்மை, ஆடைகள் வடிவமைப்பு மற்றும் பால் பண்ணைத் தொழில் குறித்த படிப்புகள் இன்று பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

உயிர்த் தொழில் நுட்பம் சார்ந்த துறைகளில் பல்வேறு படிப்புகள் உள்ளன. இவைகள் அதிகமான வேலைவாய்ப்புகளை வழங்கும் படிப்புகளாக இன்று கருதப்படுகிறது.



கணினி மற்றும் கணினி தொடர்புள்ள கல்வி

இன்று காணுமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது கணினியாகும். அனைத்துத் துறைகளிலும் கணினியின் ஆதிக்கமே. கணிப்பொறி குறித்த அறிவு மிக முக்கியமாகும். எண்ணற்ற வேலைவாய்ப்புகளை வழங்கி, பொருளாதார முன்னேற்றத்திற்குக் கைகொடுத்து வரும் கணிப்பொறித் துறையில் உள்ள ஒவ்வொரு பிரிவும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே இருக்கிறது. எனவே தொழில் நுட்ப மாற்றத்திற்கேற்ப தொடர்ந்து புதியவைகளைப் படித்து, கணினி குறித்த அறிவைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

கணினி சித்திரக் கலை (அனிமேஷன்)

கம்ப்யூட்டர் அனிமேஷன் எனப்படும் கணினி சித்திர வரைவுகள் இன்று அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று ஏராளமான கல்வி நிறுவனங்களில் இப்படிப்பு கற்றுத் தரப்படுகிறது. இதைப் படித்தவர்களுக்குத் தொழிற்சாலைகள், ஆய்வுக் கூடங்கள், திரைப்படத் துறை, தொலைக்காட்சி, விளம்பர நிறுவனங்கள் போன்றவற்றில் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

மேலும் நூலகம் மற்றும் தகவல் அறிவியல், இதழியல், புத்தக வெளியீடு, விளம்பரம், சுற்றுலா மற்றும் பயணம், மக்கள் தொடர்பு, விமான ஓட்டுனர் கல்வி, தகவல் தொழில் நுட்பம் சார்ந்த படிப்புகள், மானுடவியல், வானியல், பிளாஸ்டிக் மற்றும் தோல் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகள், சுற்றுச்சூழல் கல்வி, வடிவமைப்புக் கல்வி, ஃபேஷன் தொழில் நுட்பம், மறுவாழ்வுப் படிப்புகள், சமூகப் பணி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி, மேலாண்மை சார்ந்த படிப்புகள் போன்றவைகளும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்புகளாகும்.

கணிப்பொறி அறிவியல்

+2 படிப்பில் கணினி அறிவியல் படிப்பவர்கள் மேற்படிப்பிற்குத் தேர்ந்தெடுப்பது இளங்கலை கணிப்பொறி அறிவியல் படிப்பாகும். இதில் கணினியில் பயன்படுத்தப்படும் மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகியவற்றின் அடிப்படை விவரங்கள் கற்றுத் தரப்படுகின்றன.இப்படிப்பை முடிப்பவர்கள் மேற்கொண்டு எம்.எஸ்.சி., எம்.சி.ஏ., முதுகலை டிப்ளமோ உள்ளிட்ட கணினி சார்ந்த படிப்புகளை படிக்கலாம்.

கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் (பி.சி.ஏ.,)

தற்போது இத்துறைப் படிப்பு பிரபலமாகி வருகிறது. தனியார் துறை மற்றும் கணிப்பொறி சார்ந்த அனைத்து நிறுவனங்களிலும் இப்படிப்பு படித்தவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன. எம்.சி.ஏ. போன்ற மேற்படிப்பையும் படிக்கலாம்.

கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் (பி.காம்.,)

+2 வணிகவியல் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இப்படிப்பைத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்படிப்பில் வணிகவியல், கணக்குப் பதிவியலுடன், கணினிப் பயன்பாடுகளும் கற்றுத் தரப்படுகின்றன. இதில் எம்.சி.ஏ,. சி.ஏ., ஏ.சி.எஸ்., ஐ.சி.டபிள்யூ.ஏ., போன்ற மேற்படிப்புகளையும் படிக்கலாம். ■

கம்ப்யூட்டர் அனிமேஷன் எனப்படும் கணினி சித்திர வரைவுகள் இன்று அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று ஏராளமான கல்வி நிறுவனங்களில், இப்படிப்பு கற்றுத் தரப்படுகிறது. இதைப் படித்தவர்களுக்குத் தொழிற்சாலைகள், ஆய்வுக் கூடங்கள், திரைப்படத் துறை, தொலைக்காட்சி, விளம்பர நிறுவனங்கள் போன்றவற்றில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன.

கணிப்பொறி குறித்த அறிவு மிக முக்கியமாகும். எண்ணற்ற வேலைவாய்ப்புகளை வழங்கிப், பொருளாதார முன்னேற்றத்திற்குக் கைகொடுத்து வரும் கணிப்பொறித் துறையில் உள்ள ஒவ்வொரு பிரிவும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே இருக்கிறது.

தூத்துக்குடி

நலிவுற்றோருக்கு உதவி

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புதூர் கிராமத்தில் ‘கஸ்தூரிபா மகளிர் மன்றம்’ கடந்த 10 ஆண்டுகளாக வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் சார்பில், மகளிர் தின விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது.

திருமதி. வி. வீரமணி அவர்கள் வரவேற்புரை வழங்க, திருமதி. எஸ். ரெங்கநாச்சியார் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

குழுவின் உறுப்பினர்களும் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பெண்களும் கலந்து கொண்ட கோலப் போட்டி நடைபெற்றது. வண்ண வண்ணக் கோலங்களைப் போட்டியில் கலந்து கொண்ட பெண்கள் போட்டிருந்தனர். இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. குழுவின் உறுப்பினர்களிடம் இருந்து ‘பிடி அரிசி’ பெறப்பட்டு, ஏழை எளிய சகோதரிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திருவாளர்கள். ஏ. காவேரித்தாயம்மாள், திலகவதி, எம். சித்திரை வடிவு மற்றும் வி. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

திருமதி. பி. சாந்தி அவர்கள் ‘இறையன்பு’ என்ற தலைப்பில் மகளிரிடையே சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். இந்த சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிகவும் உபயோகமாக இருந்தது. ■

இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும், ஒற்றுமையுடனும் இணைந்து மிகச் சிறப்பாக விழாவினை நடத்தினர்.

நாகை

நன்றி! நன்றி!!

நாகை மாவட்டம், குறிச்சி ஊராட்சியில் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர் எஸ். அருள்மொழி. இவர் 9ஆம் வகுப்பு படித்து முடித்துவிட்டு மீண்டும் படிப்பினைத் தொடர வசதியில்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அவரின் கிராமத்திற்கு வந்தது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம். இதன் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் இலவசமாக அளிக்கப் பட்டுகின்றன என்ற செய்தியினை அறிந்து இலவசப் பயிற்சிக்கு விண்ணப்பித்தார் அருள்மொழி.

மயிலாடுதுறை பெஸ்ட் தொழிற்பயிற்சிப் பள்ளியில் ஹாஸ்பிடல் ஹவுஸ் கீப்பிங் என்ற 3 மாத இலவச தொழிற்பயிற்சியில் சேர்ந்து பயின்றார். இதன் மூலம் மருத்துவமனையில் நேரடி செய்முறை பயிற்சிப் பெற்றுத் தற்பொழுது சென்னை சி.ஐ.டி. நகரில் உள்ள மருத்துவமனையில் பணி புரிகிறார்.

இங்கு தங்குமிடம், உணவு போன்ற வசதிகளுடன் மாதம் ரூபாய் 3000/– ஊதியமாகப் பெறுகிறார். இப்பொழுது தனது வருமானத்தின் மூலம் தனது குடும்பத்தின் வறுமையை நீக்கப் பெருமளவில் உதவி வருகிறார்.

இந்த அரிய வாய்ப்பினைத் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்குதனது மனமார்ந்தநன்றியைதெரிவித்துக் கொள்கிறார் அருள்மொழி. ■

தி ரு வ ண் ணா ம லை

வெற்றி பெற்ற கதை

திருவண்ணாமலை, குன்னத்தூரைச் சேர்ந்தவர் திருமதி. வள்ளி. இவரின் கணவர் சேட்டு கூலிக்கு நெசவு நெய்பவர். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். கணவருக்குக் கிடைக்கும் கூலியில் குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் சிரமப்பட்டார் திருமதி. வள்ளி. இந்நிலையில் தனது வீட்டிற்கு அருகில் வசித்து வரும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புச் செயலாளரான திருமதி. ஜெயந்தி என்பவரின் மூலம், சுய உதவிக் குழுவின் பெருமைகளையும், குழுவில் இணைவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளையும் குறித்து திருமதி. வள்ளி தெரிந்து கொண்டார்.

தன் எதிர்காலம் பிரகாசமடைய வேண்டும் என்ற எண்ணத்தில் ‘பவானி மகளிர் சுய உதவிக் குழுவில்’ திருமதி வள்ளி ஊக்குனராகச் சேர்ந்தார். 16 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாகக் குழுவினைச் செயல்படுத்தி, தனது சேமிப்பின் மூலம் உட்கடன் பெற்றார். அந்தத் தொகையில் தமக்குத் தெரிந்த பட்டு நெசவுத் தொழில் தொடர்புடைய தொழிலினை சிறிய அளவில் தொடங்கத் தீர்மானித்தார்.

தற்போது வள்ளி, துக்கு ஜரிகை, பட்டு சேலை போன்றவற்றை விற்பனை செய்து வருவதுடன், ஒரு பட்டுத் தறியினையும் சொந்தமாக அமைத்துள்ளார். இதில் கிடைக்கும் வருமானத்தில் வங்கிக் கடன் தவணை செலுத்தியது போக மீதமுள்ள தொகையினைக் கொண்டு தனது குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றி வருகிறார். தனது அயராத உழைப்பினால் வெற்றி பெற்றுள்ள திருமதி. வள்ளி தனக்கு ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்தது மகளிர் திட்டம் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார். ■

> நெசவுத் தொழில் சம்பந்தப்பட்ட துக்கு ஜரிகை வாங்கி விற்பனை செய்வதன் மூலம் 10 விழுக்காடு இலாபம் கிடைக்கும் என்பதைத் தெரிந்து அந்தத் தொழிலை மேற்கொள்ள முடிவு செய்து, தற்போது துக்கு ஜரிகை விற்பனை செய்து வருகிறார். இதன் மூலம் கிடைக்கும் தொகையில் செலவு போக மீதமுள்ள தொகையைச் சிறுகச் சிறுகச் சேமித்து, தனது கணவருக்குச் சொந்தமாகப் பட்டு நெசவுத் தறி ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளார் திருமதி. வள்ளி.

செ ன் னை

தையல் தொழில்

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, சோலையப்பன் தெருவில் வசித்து வரும் பெண்கள் ஏழ்மையை அகற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் ‘கிளாசிக் மகளிர் சுய உதவிக் குழு’வினைத் துவக்கி செயல்பட்டு வருகின்றனர். இக்குழுவில் உள்ள உறுப்பினர்களில், 8 மகளிருக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் தையல் இயந்திரங்கள் வாங்கி, அப்பகுதியில் உள்ளவர்களுக்குத் துணிகளைத் தைத்துக் கொடுப்பதுடன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்குத் தையல் பயிற்சியையும் அளித்து வருகின்றனர். மிகவும் குறைந்த செலவில் தரமாகவும், கண்கவர் வகையிலும், குறிப்பிட்ட நேரத்திலும் துணிகளைத் தைத்துக் கொடுப்பதால் இக்குழுவினரைத் தேடி அதிகமான வாடிக்கையாளர்கள் வருகின்றனர். இதன் மூலம் மாதம் ரூபாய் 32 ஆயிரம் வரை வருவாய் பெற்றுப், பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். ■

சுய உதவிக் குழுக்கள் தொடர்

(ப. சஞ்சீவ் குமார்)

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

திட்டமிடுதல் என்பது அனைத்துப் பணிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்பான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலும் வெற்றியடையும் என்பதே உறுதியாகும். ஏனெனில் ஒரு செயலைத் திட்டமிட்டுச் செய்யும்போது அதில் உள்ள குறைகள் களையப்பட்டு, வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே, வணக்கம்.

இப்பகுதியில் ஒரு தொழில் முனைவோர் திட்ட அறிக்கையைத் தயார் செய்யும்போது, கவனிக்க வேண்டியவைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

திட்ட அறிக்கை

எந்த ஒரு செயல் வெற்றியடைய வேண்டுமென்றாலும் திட்டம் தேவை. திட்டமின்றிச் செய்யும் எந்த ஒரு செயலும் நிச்சயமாகத் தோல்வி அடையும். இதை ஆங்கிலத்தில் Failing to Plan is Planning to Fail என்று கூறுவார்கள். அதாவது திட்டமிடுதலைத் தவறவிட்டால் தவறுவதற்காகவே திட்டமிடுகிறோம் என்று பொருள். எனவே ஒவ்வொரு தொழில் முனைவோரும் தொழில் தொடங்குவதற்கு முன்னர் திட்ட அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும். அதைச் செய்யப் பின்வரும் வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

திட்ட அறிக்கை தயார் செய்வதன் அவசியம்

திட்ட அறிக்கை என்பது ஒரு தொழில் தொடங்குவதிலிருந்து அதில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் வரை ஆகும் செலவுகளைச் சரியாகக் கணக்கிட்டுக் குறைந்த அளவு இலாபம் வைத்து, விலை நிர்ணயம் செய்வது திட்ட அறிக்கையின் முக்கிய நோக்கமாகும். திட்ட அறிக்கை சரியான முறையில் தயார் செய்யவில்லை என்றால் நாம் தயாரிக்கும் பொருட்களுக்குச் சரியான விலை நிர்ணயிக்க முடியாது. இறுதியில் தொழிலில் நட்டத்தைச் சந்திக்க நேரிடுவதோடு தொழிலில் வெற்றியடைய முடியாத நிலை ஏற்படுகிறது.

> தொழிலுக்குப் புதிய நபராக இருந்தால், இதே தொழிலைத் துவங்கி நடத்துபவர்களை நேரில் சந்தித்து அத்தொழிலைப் பற்றி முழுமையான விபரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திட்ட அறிக்கை தயார் செய்யும் முன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

1. ஒரு தொழில் முனைவோர் தொழில் துவங்கும் போது, தொழில் குறித்துப் பரிபூரணமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதோடு அதில் சிறிதளவேனும் அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும். தொழிலுக்குப் புதிய நபராக இருந்தால் இதே தொழிலைத் துவங்கி நடத்துபவர்களை நேரில் சந்தித்து அத்தொழிலைப் பற்றி முழுமையான விபரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
2. துவங்கப் போகும் தொழில் அடுத்து வரும் 20 வருடங்களுக்கு மேல் சிறந்த எதிர்காலம் உள்ளதாக இருக்க வேண்டும்.
3. உற்பத்திப் பொருட்கள் சந்தையில் தேவை அதிகமுள்ளதாக இருக்க வேண்டும்.
4. உற்பத்திப் பொருட்கள் எளிதாக சந்தைப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.
5. தொழிலைச் சிறப்பாக மேற்கொள்ள அனுபவமுள்ள பணியாளர்கள் இருக்க வேண்டும்.
6. உற்பத்திப் பொருட்கள் புதுமையான முறையில் வாடிக்கையாளர்களுக்கு எளிதில் சென்றடையும் வண்ணம் இருக்க வேண்டும்.
7. பொருட்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்ய மூலப்பொருட்கள் எளிதாகத் தடையின்றிக் கிடைக்கக் கூடியதாகவும், அருகில் கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
8. பொருட்களை உற்பத்தி செய்ய இடம் மற்றும் போக்குவரத்து வசதிகள் சரியான முறையில் அமைந்திருக்க வேண்டும்.

மேற்கூறியவைகளை நினைவில் கொண்டு தொழில் முனைவோர் திட்ட அறிக்கையை தயார் செய்ய வேண்டும். முடிந்தளவு ஒரு தொழில் முனைவோர் திட்ட அறிக்கையைத் தாங்களாகவே தயார் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் மூன்றாவது நபர் மூலம் திட்ட அறிக்கையைத் தயார் செய்யக் கூடாது. ஏனென்றால் அவ்வாறு மூன்றாம் நபர் திட்ட அறிக்கை தயார் செய்தால் வங்கிக் கடன் பெறும்போது வங்கி மேலாளருக்குத் தெளிவான முறையில் விளக்கி வங்கியாளரைத் திருப்திப்படுத்த முடியாது. அதேபோல் வங்கி மேலாளர் வங்கிக் கடன் தொகையைக் குறைக்குமாறு கூறினாலும் முடிந்தளவு அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

(தொடரும்)

மகளிர் திட்டம்

வாழ்க...வாழ்கவே!

அறியாமை இருளினிலே
அடங்கிக் கிடந்த பெண்களை
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய்
மாற்றிய மகளிர் திட்டம் வாழ்கவே!

குழுவாய் ஒன்றிணைத்து
சேமிக்கும் பண்பை வளர்த்து
சுழல் நிதியும் வங்கிக் கடனும் வழங்கிய
மகளிர் திட்டம் வாழ்க...வாழ்கவே!

பொறுப்புடனே தொழில் முனைந்து
பொருளாதார வளர்ச்சி பெற்று
பெண்ணினம் உயர்வடைய
செயல்படும் மகளிர் திட்டம் வாழ்கவே!

ஏழ்மை இருள் அகன்றிடவே
எல்லோரும் வளம் பெறவே
எப்போதும் துணை நிற்கும்
மகளிர் திட்டம் வாழ்க...வாழ்கவே!

– செல்வி. கமலம் – ஹேமலதா,
குத்தனூர் கிராமம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மாவட்டச் செய்திகள்

திருவாரூர்

சிறப்பான செயல்பாடு

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியத்திலுள்ள திருராமேஸ்வரம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் 15 உறுப்பினர்களுடன் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழு, பூந்தளிர் மகளிர் சுய உதவிக் குழுவாகும். 02.11.2000 அன்று துவக்கப்பட்ட இக்குழு 2004ஆம் ஆண்டு சுழல் நிதி பெற்றுள்ளது. சுழல் நிதித் தொகை மற்றும் உறுப்பினர்களின் சேமிப்புத் தொகை ஆகியவை குழு உறுப்பினர்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உட்கடனாக வழங்கப்படுகிறது.

விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணிகளில் குழுவின் உறுப்பினர்களே ஈடுபட்டு வருவதன் மூலம் இலாபமாக மட்டும் ரூபாய் 12 ஆயிரம் வரை கிடைக்கிறது. மருத்துவ முகாம், கால்நடை மருத்துவ முகாம், சட்ட விழிப்புணர்வு முகாம், குளம் தூர் வாருதல் போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு தங்களின் கிராமத்தின் வளர்ச்சிக்கு செயலாற்றி வருகின்றனர்

இக்குழுவினர் 2005ஆம் ஆண்டில் நேரடிக் கடன் பெற்று, அத்தொகையில் 5 ஏக்கர் நிலத்தினைக் குத்தகைக்கு எடுத்து, அதில் பல்வேறு வகையான பயிர் வகைகளைப் பயிரிட்டு விற்பனை செய்து வருகின்றனர். வங்கியில் பெற்ற கடனை முழுவதும் திரும்பச் செலுத்தி விட்டனர். இக்குழுவின் சிறப்பான செயல்பாடுகளால் தாட்கோ மூலம் ரூபாய் 2,50,000/–ஐ மானியத்துடன் கூடிய தொழிற்கடன் ரூபாய் 5,15,000/– பெற்றுள்ளனர். அத்தொகையைக் கொண்டு ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய 9 ஏக்கர் நிலத்தைக் குழுவிற்குச் சொந்தமாக வாங்கியுள்ளனர். இதற்கான பத்திரத்தில் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நிலத்தில் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையில் வங்கிக் கடனுக்கான தவணைத் தொகை கட்டியது போக மீதமுள்ள தொகையில் ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய 5 ஏக்கர் நிலத்தினைக் குத்தகைக்கு வாங்கி தற்போது நில உரிமையாளர்களாக முன்னேற்றம் பெற்றுள்ளனர். ■

விழுப்புரம்

கைத்தறியால் பெற்ற வெற்றி

விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சியில் அமைந்துள்ளது சங்கீதமங்களம் கிராமம். இக்கிராமத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள்.

இந்நிலையில் 2004ஆம் ஆண்டு 20 பெண்கள் இணைந்து வி. ஜி. பி. அன்னை மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினர். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இப்பெண்கள் தங்களுக்கு கிடைக்கும் சிறிய தொகையினையும் வங்கியில் சேமித்து வந்தனர்.

எதிர்பாராத செலவினங்களுக்காக சேமிப்புத் தொகையில் இருந்து உள்கடனாகப் பெற்றுக் கொண்டனர். மகளிர் திட்டம் மூலம் நிர்வாகப் பயிற்சிகளையும், தொழிற் பயிற்சிகளையும் பெற்றனர்.

இக்குழுவினருக்குச் சுழல் நிதியாக ரூபாய் 25 ஆயிரம் வழங்கப்பட்டது. அத்தொகையினைக் கொண்டு சிறிய அளவில் கைத்தறித் துணி உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர்.

இக்குழுவினர் தங்களது தொழிலை மேலும் விரிவுபடுத்த முடிவு செய்தனர். மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன், எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின் மூலம் மானியமாக ரூபாய் 1,25,000/–ம், பொருளாதாரக் கடனுதவியாக ரூபாய் 3,75,000/–ம் பெற்றனர். இத்தொகையைக் கொண்டு கைத்தறித் துணிகள் உற்பத்தியில் முழு மூச்சுடன் ஈடுபடத் துவங்கினர்.

தாங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள், கண்காட்சிகள், துணி விற்பனை நிலையங்கள் மற்றும் பூமாலை வணிக வளாகங்கள் ஆகியவை மூலமும் விற்பனை செய்து வருகின்றனர்.

வி. ஜி. பி. அன்னை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தற்போது மாதந்தோறும் கணிசமான தொகையினை வருவாயாகப் பெற்று வருவதுடன், வங்கிக் கடனையும் தவறாமல் திரும்பச் செலுத்தி வருகின்றனர். மேலும் சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

திருநெல்வேலி

சிமெண்ட் விற்பனையில் மகளிர் குழு

திருநெல்வேலி மாவட்டம், விஸ்வநாதபுரத்தில் 2008ஆம் ஆண்டு முதல் கஸ்தூரி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்களுக்குத் தேவையான அடிப்படை பயிற்சிகள் மகளிர் திட்டம் வாயிலாக அளிக்கப்பட்டது. வங்கியில் சேமிக்கத் துவங்கிய இக்குழுவினருக்கு சுழல் நிதி, பொருளாதாரக் கடன், நேரடிக் கடன் போன்றவை பெற்றுத் தரப்பட்டது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த இக்குழுவின் உறுப்பினர்கள் சுய தொழிலாக சிமெண்ட் வியாபாரம் செய்யத் துவங்கினர். தொழிலைச் செம்மைப்படுத்துவது, விரிவுபடுத்துவது, சந்தையிடுவது போன்ற பயிற்சிகளும், நேரடிக் கடன் பெறுவது குறித்த வழிகாட்டுதல்களும் மகளிர் திட்டத்தின் வாயிலாக இக்குழுவினர் பெற்றனர்.

கூட்டமைப்பின் மூலம் பெற்ற ரூபாய் ஒரு இலட்சம் கடனுதவியினைக் கொண்டு கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து அதில் சிமெண்ட் விற்பனையை மேற்கொண்டு வருகின்றனர். பொருளாதாரக் கடனாக 4 இலட்சம் ரூபாய் பெற்று தங்களின் வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்தி உள்ளனர். தங்களாலும் வாழ்வில் உயர முடியும் என்று சாதித்துக் காட்டிய கஸ்தூரி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மற்ற பெண்களுக்கு எடுத்துக் காட்டாக உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மாற்றுத் திறனாளிகள், விதவைகள், முதியோர், ஆதரவற்றோர் போன்ற அனைவருக்கும் உதவும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வரும் கஸ்தூரி மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது. ■

விருதுநகர்

தூய்மையான குடிநீர் உற்பத்தி

விருதுநர் மாவட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் எச். ஆர். எப். தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் 2001ஆம் ஆண்டு ரோஜா மகளிர் மன்றம் துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலமாக பல்வேறு பயிற்சிகளைப் பெற்றனர். குழுவின் சார்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்து, 'ரோஜா மினரல் வாட்டர் பிளாண்ட்' என்ற பெயரில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தைத் துவக்கினர். இத்தொழிலின் மொத்த மதிப்பு 15,20,000/– ரூபாய் ஆகும். தொண்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் வங்கிக் கடனாக ரூபாய் ஐந்து இலட்சம் பெற்றனர். ஒவ்வொரு உறுப்பினரும் தலா ரூபாய் 10 ஆயிரத்தைத் தங்களின் பங்காகச் செலுத்தினர். மீதத் தொகையினைப் பிற சுய உதவிக் குழுக்களிடம் கடனாகப் பெற்றனர்.

தங்கள் பகுதியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கலசலிங்கம் பல்கலைக் கழகத்திற்கும், அதனுடைய 5 விடுதி களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்க ஒப்பந்தம் செய்துள்ளனர். தற்போது வாரந்தோறும் ரூபாய் 25 ஆயிரம் மதிப்பிற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கி வருகின்றனர். வங்கியிலும் மற்றும் வெளியிலும் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தி வருவதுடன், குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் வருவாயும் பெற்று வருகின்றனர்.

பள்ளி செல்லாமல் இடையில் நின்ற 6 குழந்தைகள் மீண்டும் பள்ளிக்குச் செல்ல உதவியது, கல்விக்குத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குவது, போலியோ சொட்டு மருந்து முகாம், எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டு உதவுவது, மரங்களை நடுதல், கிராம சபாக் கூட்டங்களில் பங்கு கொள்வது போன்ற நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

பெண்களும்

மன அழுத்தமும்

ஒரு பெண்ணைச் சதாகாலமும் கணவனோ அல்லது அவள் சார்ந்திருக்கும் எவரோ திட்டிக் கொண்டே இருந்திருந்தால் அவள் மிகக் கொடிய மன அழுத்த நோய்க்குள் விழுவாள் என்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

மன அழுத்த நோயால் பாதிக்கப்படுபவர்களில் எழுபத்து ஐந்து விழுக்காட்டினர் பெண்கள் என்பது வெறுமனே புள்ளி விவரங்களைப் பார்த்துக் கடந்து செல்வதற்கானது அல்ல. அது நமது சமூகத்தின் மீதும் நமது கலாச்சாரக் கட்டமைப்புகளின் மீதும் கேள்விகளை எழுப்புவதற்கானது.

சமூகக் கட்டமைப்புகள், இன்னும் பெண்ணை முழுமையாய் அவளுடைய கோபத்தை வெளிக்காட்ட அனுமதிக்கவில்லை என்பதே உண்மை. அப்படி தனக்குள்ளேயே அடக்கப்படும் கோபம் மன அழுத்தத்தின் அடிப்படைக் காரணியாகி விடுகிறது.

ஒரு ஆண் தனது மன அழுத்தத்தைக் கோபத்தின் மூலமாகவோ அல்லது தனக்கு விருப்பமான ஏதோ ஒரு வழியிலோ வெளியேற்றி விடுகின்றான். பெண்களுக்கு அத்தகைய வாய்ப்பு மிகக் குறைவாகவே வழங்கப்படுகிறது.

மன அழுத்தம் ஏற்பட்டு விட்டால் எந்த வேலையையும் சிறப்பாகச் செய்ய இயலாது. குறிப்பாகக் கலை மற்றும் அறிவியல் சார்ந்த பணிகளில் ஈடுபடுவோருக்கு மன அழுத்த பாதிப்பு ஏற்பட்டால் அவர்களால் தாங்கள் மேற் கொள்ளும் பணியைத் திறம்படச் செய்ய இயலாத நிலை ஏற்படும் என்கின்றனர் மன நல ஆலோசகர்கள்.

அவள் பெண் என்று கற்காலச் சமூகம் கட்டி வைத்த கோட்டைகளைத் தாண்ட முடியாமல் அதே அட்டவணைக்குள் தான் வாழ வேண்டி இருக்கிறது. இத்தகைய வரையறைகளைத் தாண்டும்போது ஆண்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதுவும் சமீப காலமாக அதிகரித்து வரும் மணமுறிவுக்கு ஒரு முக்கியக் காரணம் என்கின்றனர் மருத்துவர்கள்.

தனக்குள்ளேயே வெடித்துத் தன்னை அழிக்கும் மனக் கண்ணி வெடி ஒரு ரகமான மன அழுத்தத்தைப் பெண்களுக்குத் தருகிறது என்றால் தொழில் அழுத்தம், பணிச் சுமை, சுதந்திரமின்மை எனப் பல செயல்கள் வெளியிலிருந்து தாக்குகின்றன. பெண்களின் மன அழுத்தத்திற்கு உடலியல் ரீதியாகவும் பல காரணங்கள் உள்ளன. பெண்களுடைய ஹார்மோன்களின் சமநிலை ஆண்களைப் போல இருப்பதில்லை. வெகு விரைவிலேயே அதிக மாற்றத்தை அது சந்திக்கிறது. இயற்கை பெண்ணுக்கு அளித்திருக்கும் மாதவிலக்கு சுழற்சிகள் இதன் முக்கிய காரணமாய் இருக்கின்றன. தான் பெண்ணாய் பிறந்து விட்டோமே எனும் சுய பச்சாதாபம் பல பெண்களுடைய வாழ்க்கையில் மன அழுத்தத்தைக் கொண்டு வருகின்றது. அதற்குக் காரணம் சமூகத்தில் ஒரு ஆணுக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரமும், சுதந்திரமும் பெண்ணுக்குத் தரப்படவில்லை என்பதும், அதை எடுக்க முயலும்போது அவள் முரட்டுத் தனமான கருத்துக்களால் முடக்கப்படுகிறாள் என்பதுமே. நேரடியான மன அழுத்தம் பெரும்பாலும் மனம் சம்பந்தப்பட்டது. நம் மீது திணிக்கப்படுபவையோ, நம்மால் உருவாக்கப்படுபவையோ உள்ளுக்குள் உருவாக்கும் அழுத்தம் அது.

மகிழ்ச்சியாக இருக்க முடியாத மன நிலை இத்தகைய மன அழுத்தத்தின் ஒரு முகம். ஆனந்தமாய் சுற்றுலா செல்லலாம் என அழைத்தாலும் சலனமில்லாமல் பதிலளிக்கும் மனம் அழுத்தத்தின் படிகளில் அமர்ந்திருக்கிறது என்பதை உணர வேண்டும். மறைமுகமாய் தாக்கும் மன அழுத்தம் உடல் வலிகளின் காரணமாக வரக்கூடும் என்கின்றனர் மருத்துவர்கள். குறிப்பாக முதுகு வலி, கழுத்து வலி, வயிற்று வலி என வரும் வலிகள் இரவுத் தூக்கத்தைக் கெடுக்கின்றன. நிம்மதியற்ற சூழலையும், பல உபாதைகளையும் தந்து கூடவே மன அழுத்தத்திற்கும் விதையிடுகின்றன.

> “பெண்களுக்கு இத்தகைய மன அழுத்தம் வருவதற்கு அவர்களுடைய உடல் பலகீனமும் ஒரு முக்கிய காரணமாகி விடுகிறது. ஒன்று மட்டும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். எந்த ஒரு மன அழுத்தத்தையும் எந்த ஒரு மருந்தும் முழுமையாக குணமாக்கி விட முடியாது.”

நம்மைச் சார்ந்து வாழும் சகோதரிகளின் மன அழுத்தத்திற்கான விதை நம் வார்த்தைகளிலிருந்தோ, செயல்களிலிருந்தோ விழுந்து விடாமல் கவனமாய் இருப்பது ஆண்களின் கடமை. பெண்களும், சமூகம் என்பது ஆண்கள் மட்டுமான அமைப்பல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். காற்றடித்தால் மூடிக் கொள்ளும் தொட்டாச்சிணுங்கி மனப்பான்மையிலிருந்து தைரியமாகச் சமூகத்தின் வீதிகளில் பழமைவாதிகளின் எதிர்ப்புகளுக்குப் பலியாகாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். புரிதலும், அன்பான அரவணைப்பும் கொண்ட, தேவையற்ற அழுத்தங்களுக்கு இடம் தராத, சின்ன சுவர்க்கங்களாகக் குடும்பங்கள் விளங்கினால். மன அழுத்தம் விடை பெற்றோடும் என்பதில் ஐயமேதுமில்லை. ■

குழந்தைகளைத் தாக்கும் கோடைகால நோய்கள்

இந்த ஆண்டு வெயில் மக்களை வாட்டியெடுக்க வேண்டும் என்கிற தீவிரத்துடன். உச்ச நிலையை எட்டியுள்ளது. குறிப்பாக, சிறு குழந்தைகளும், வயதானவர்களும், வெயில் வேகத்தின் பாதிப்புக்கு உள்ளாவர்கள். கோடை காலத்தில் வியர்வை அதிகம் இருக்கும். சுட்டெரிக்கும் வெயில் பாதிப்பு குழந்தைகளுக்கு ஏற்படாத வகையில் பெற்றோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வெயில் காலத்தில் டயோரியா, நீர்ச்சத்து இழப்பு, வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படுகிறது. எனவே குடிக்கும் தண்ணீர் உரிய சுகாதாரத்துடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நீர் பற்றாக்குறை ஏற்படும் தருணத்தில், சிலர் பாதுகாப்பற்ற தண்ணீரைக் குடிக்கவும் செய்கின்றனர். தண்ணீர் உரிய முறையில் இல்லாதபோது நோய்கள் வரக் காரணமாக அமைகிறது என குழந்தைகள் சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

நீண்டதூரம் பயணம் மேற்கொள்ள வேண்டிய சூழல் இருப்பவர்கள், மோர் அருந்தி வருவது நல்லது. சில குழந்தைகள் கோடைகாலத்திலும் வெந்நீரில் குளிக்கும் பழக்கத்தைக் கடைபிடிக்கும். அதனைத் தவிர்க்க வேண்டும்.

அனைத்து வயது குழந்தைகளுக்கும் வைட்டமின் ‘சி’ சார்ந்த உணவுப் பொருள் அவசியமானது. எலுமிச்சை பழச்சாறு குடிக்கலாம். செயற்கை இழை ஆடைகளைத் தவிர்த்துப் பருத்தி ஆடைகள் அணிவது நல்லது.

15 வயது வரை உள்ள குழந்தைகளின் உடல் நலன் விஷயத்தில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். அதிகாலை, மாலை நேரங்களில் மட்டுமே அவர்களை விளையாட அனுமதிக்க வேண்டும். கோடை காலத்தில் இந்த வயதினருக்கு மஞ்சள் காமாலை, அம்மை, டைபாய்டு போன்றவை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

குழந்தைகளைப் போல் பெரியவர்களும் தினமும் அதிக அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். கோடை காலத்தில் அம்மை நோய் தாக்கம் அதிகம் இருப்பதால் பெற்றோர் நோய் தடுப்பு தற்காப்பு நடவடிக்கையாகத் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதுடன் மருத்துவரின் ஆலோசனைகளையும் பெற வேண்டும். ■

வளர்க வணிகம்

பனை ஓலை பொருட்கள்

அன்னை மாயா சுய உதவிக் குழு,
நாகப்பட்டினம் மாவட்டம்.
செல்பேசி: 96263 83955

கால் மிதியடிகள்

குமரகிரிப்பேட்டை நெசவுத் தொழிலாளர் கூட்டமைப்பு,
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி: 97908 72013

பருத்தி புடவைகள்

சப்தகன்னி சுய உதவிக் குழு,
மதுரை மாவட்டம்.
செல்பேசி: 93624 16104

அழகிய மண் பொம்மைகள்

செல்வ விநாயகர் சுய உதவிக் குழு,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்பேசி: 97902 85758

அழகிய கலைப் பொருட்கள்

கண்ணாத்தாள் சுய உதவிக் குழு,
சிவகங்கை மாவட்டம்.
செல்பேசி: 94423 79809

மரப் பொருட்கள்

சோழா சுய உதவிக் குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
செல்பேசி: 93442 99129

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் - கலந்துரையாடல்

இராமநாதபுரம் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்தார். அப்போது அவர் கமுதக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளை வறுமை ஒழிப்புச் சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும் வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் நடைபெற்ற பயிற்சிகள், சுய உதவிக் குழு நடவடிக்கைகள், கூட்டமைப்பின் செயல்பாடுகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் முன்னேற்றத்திற்கு மேற் கொள்ளப்படும் செயல்பாடுகள், இளைஞர் வேலை வாய்ப்புப் பயிற்சி மற்றும் இளைஞர் மேம்பாடு போன்ற செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டத் திட்ட மேலாளர் திரு. ஜா. ஜோசப் ஆனந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

> இக்குழுக்களை ஊராட்சி அளவில் மறுசீரமைப்புச் செய்து, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் அமுதசுரபி நிதி பெறப்பட்டு ஏழை, எளிய மக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களின் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இக்கலந்துரையாடலில், இலக்கு மக்கள் பட்டியலில் உள்ளவர்களையும், மாற்றுத் திறனாளிகளையும் குழுக்களில் இணைத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளித்து வருவதாகவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சியும், மாற்றுத் திறனாளிகளுக்குத் தனிநபர் உதவியும் வழங்கப்பட்டுள்ளது என்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டத் திட்ட மேலாளர் திரு. ஜா. ஜோசப் ஆனந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

கொத்தனார் பயிற்சி - கலந்துரையாடல்

வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் மாயசுதன் தொழிற்பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்று வரும் இளைஞர்களுக்கான கொத்தனார் பயிற்சியை ஆய்வு செய்தார்கள். அப்போது அங்கு பயிற்சி பெற்று வரும் இளைஞர்களிடம் பயிற்சியின் தரம் மற்றும் பயிற்சியின் பாடத் திட்டம் ஆகியவை குறித்து கலந்துரையாடினார்.

மேலும் கொத்தனார் பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் குறித்த பல்வேறு விபரங்களை பயிற்சியாளர்களிடம் எடுத்துக் கூறி, பயிற்சியில் தொடர்ந்து பங்கேற்க அறிவுறுத்தினார். அதிக அளவில் செயல்முறைப் பயிற்சி எடுத்திடப் பயிற்றுநர்களையும், பயிற்சி பெறுபவர்களையும் கேட்டுக் கொண்டார். ■

> இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் நேரடி வேலை வாய்ப்பின் மூலம் இப்பகுதி இளைஞர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி, JCB பயிற்சி, TVS போர்க் லிப்ட் ஆப்பரேட்டர் பயிற்சி, உணவு மேலாண்மைப் பயிற்சி மற்றும் கார்மெண்ட்ஸ் முதலிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

வாழ்வில் ஒளியேற்றிய தீபம்!

நீராவி ஊராட்சியில் வசிப்பவர் திரு. முருகேசன். இவருக்கு ஒரு அண்ணன், ஒரு தம்பி, ஒரு தங்கை உள்ளனர். சிறு வயதில் போலியோ நோய் தாக்கியதால் திரு. முருகேசனின் இரண்டு கால்களும் செயல் இழந்து விட்டன. ஆனாலும் சிறு வயதில் சகோதரர்களுடன் மகிழ்ச்சியாகவே இருந்து வந்த திரு. முருகேசனுக்கு மற்றவர்களை விட பெற்றோரின் அரவணைப்பு அதிகமாகவே கிடைத்தது.

பெரியவர்களானதும் திரு. முருகேசனின் சகோதரர்கள் பணி நிமித்தமாக வேறு வேறு ஊர்களுக்குச் சென்று விட்டனர். தங்கையும் திருமணம் செய்து கொண்டு வேறு ஊருக்குச் சென்று விட்டார். தந்தையும் வெளியூருக்கு வேலை நிமித்தமாகச் சென்று விடக், கூலி வேலைக்குச் சென்று வரும் தாயாரைத் தவிர பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாத தனிமை நிலைக்கு திரு. முருகேசன் தள்ளப்பட்டார். எந்த வேலைக்கும் செல்லாமல் எவ்வளவு நாள்தான் வீட்டில் இருப்பது, வயதான தாயாரின் கூலியை நம்பி இருப்பதும் திரு. முருகேசனுக்கு மிகவும் கவலையைக் கொடுத்தது, மிகுந்த மனச்சஞ்சலத்துடன் இருந்த அவரது வாழ்வில் ஒளியேற்றும் தீபமாக வந்தது வாழ்ந்து காட்டுவோம் திட்டம்.

இத்திட்டத்தின் அலுவலர்கள் திரு. முருகேசனுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்தனர். அவருக்கு சைக்கிள் பழுது நீக்கும் தொழில் தெரியும் என்பதால் சைக்கிள் பழுது நீக்கும் கடை வைக்க, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் ரூபாய் 5500/– உதவியாக வழங்கினார்கள். இப்போது திரு. முருகேசன் சொந்தமாகச் சைக்கிள் பழுது நீக்கும் கடை வைத்துள்ளார். இதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் அவரின் வறுமை நீங்கியதுடன், அவரது தாயாரையும் கூலி வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று கூறி விட்டார். இப்போது திரு. முருகேசனைத் தேடி பலர் வருகின்றனர். நேரமும் காலமும் நில்லாது ஓடிக் கொண்டிருக்கிறது. 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தன் வாழ்வில் ஒளியேற்றிய திட்டம்' என்கிறார் திரு. முருகேசன். ■

> வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அலுவலர்கள் முருகேசனுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்தனர். அவருக்குச் சைக்கிள் பழுது நீக்கும் தொழில் தெரியும் என்பதால் சைக்கிள் பழுது நீக்கும் கடை வைக்கக், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ரூபாய் 5500/– உதவியாக வழங்கினார்கள்

வளமான வாழ்வு தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம்!

எனது பெயர் முருகன், நான் தற்போது சவுதியில் மாதம் ரூபாய் 25,000/– ஊதியம் பெறும் பணியில் உள்ளேன். இதைச் சொல்வதற்கு எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. ஆனால் இதெல்லாம் இந்த வருடம்தான் எனக்குக் கிடைத்தது. இதற்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்டம், நெடுங்குளம் கிராமத்தில், கடை ஒன்றில் மாத ஊதியம் ரூபாய் 1000/–த்திற்கு வேலை பார்த்து வந்தேன். எங்கள் கிராமத்தில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயலாளர் ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்து, 'இலக்கு மக்கள் பட்டியலில் உங்கள் குடும்பம் இருக்கிறது, நீ தொழிற்பயிற்சிக்குப் போக விரும்பினால் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் உதவி செய்யப்படும்' என்று கூறினார்கள்.

எனக்கு ரொம்ப நாளாக JCB பழக வேண்டும் என்று விருப்பம் இருந்தது. எனது விருப்பப்படியே JCB இயக்குவது குறித்த பயிற்சியினைப் பெற்றேன். பயிற்சிக் கட்டணமான ரூ. 7500/–யை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் செலுத்தியதுடன், சான்றிதழும் பெற்றுத் தந்தனர். பயிற்சி பெற்ற சிறிது நாட்களிலேயே சவுதியில் எனக்கு வேலை கிடைத்தது. எனது குடும்பத்தின் வறுமை தற்போது நீங்கி விட்டது. எனது குடும்பத்தினர் பெற்ற கடனையும் அடைத்து விட்டதுடன், எனது அக்காவிற்கும் திருமணம் செய்து வைத்துள்ளேன். 'எனக்குக் கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றி' ■

– கே. முருகன், நெடுங்குளம் ஊராட்சி

மாற்றுத் திறனாளிகளும் சாதிக்கலாம்...!

பரமக்குடி வட்டாரத்தில், சோமநாதபுரம் என்ற சின்ன கிராமம் தான் எனது சொந்த ஊர். நெசவு தொழில்தான் எங்க ஊரில் முக்கியத் தொழில். நான் மாற்றுத் திறனாளி என்பதால் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டேன். எந்த வேலைக்கும் என்னை கூப்பிட மாட்டாங்க. ஆனால் எனக்குத் தச்சு வேலை ஓரளவுக்குத் தெரியும். கிடைத்த வேலைக்குப் போனேன். குறைவான கூலிதான் கிடைத்தது. எங்க ஊரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் தனி நபர் கடன் கொடுக்கிறதா சொன்னாங்க. நான் மாற்றுத் திறனாளி என்பதால் உடனடியாக எனக்கு ரூபாய் 10,000/– கடன் கொடுத்தாங்க. எனக்கு ரொம்ப ஆச்சரியம். உடனே எனக்கு தெரிஞ்ச தச்சு தொழில் தொடங்கணும் என முடிவு செய்து சொந்தமாகத் தச்சு பட்டறை வைத்தேன். எங்க ஊருல நெசவுத் தொழிலுக்கு மரச் சாமான்கள் நிறையத் தேவைப்படும். அதனால் எனது தச்சுப் பட்டறை சிறப்பா செயல்பட்டு, இலாபமும் நிறையக் கிடைக்கிறது. இன்றைக்கு எனக்கு சொந்தமாக ஒரு தச்சு பட்டறை இருப்பதற்குக் காரணம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்தான். இப்ப எனது குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த மகிழ்ச்சியைத் தந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்து நன்றி. ■

– தியாகராஜன், சோமநாதபுரம், பரமக்குடி ஒன்றியம்.

இருளில் ஒளியாய்...!

எனது பெயர் லெட்சுமி. நான் இராமநாதபுரம் மாவட்டம், முதல்நாடு பஞ்சாயத்தில் வசித்து வருகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, திடீரென்று எனது கணவருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. மருத்துவர்கள் ஏதோ பெயர் தெரியாத (என்னால் சொல்ல இயலாத) நோய் வந்து இருக்கிறது என்று கூறினார்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வெளியில் கடன் கேட்கச் சென்றால் என்னை நம்பி கடன் தர யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் எனது கணவரும் இறந்து விட்டார்.

இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில், இனி நான் என்ன செய்வேன் என்று எதிர்காலத்தை எண்ணிக் கலங்கி நின்றேன். என் வாழ்வே இருண்டு விட்டதாக நினைத்தேன். நான் இரண்டு அடி முன்னே சென்றால் என் வறுமை நான்கு அடி பின்னே இழுத்தது. எனக்கு இருந்த சிறிய நம்பிக்கையையும் நான் இழந்து விட்டேன். அந்த சமயத்தில் தான் இருளில் ஒளியாய் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் ஊருக்கு அறிமுகம் ஆனது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் வழங்கப்படும் தனிநபர் கடன் மூலம் ஆடு வாங்கி வளர்த்தேன். தற்போது இரண்டு ஆடுகள் மற்றும் நான்கு குட்டிகள் இருக்கின்றன. ஒரு சமயத்தில் எனக்குக் கடன் தர மறுத்தவர்கள் தற்போது எனக்கு மதிப்பளிக்கின்றனர். எனது எதிர்காலமும் ஒளிமயமானதாகக் காட்சி அளிக்கிறது. ■

– திருமதி. லெட்சுமி, முதல்நாடு பஞ்சாயத்து

பட்டம் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம்!

ஆர். பாண்டியம்மாள் ஆகிய நான் இராமநாதபுரம் மாவட்டம், குமுக்கோட்டை ஊராட்சியில் வசித்து வருகிறேன். என் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. மேலும் எனது ஒரு கால் ஊனமுற்ற நிலையில் நான் மிகவும் சிரமப்பட்டேன். 12ஆம் வகுப்பு படித்து முடித்தவுடன் என்னை மேற்படிப்பிற்கு அனுப்பும் அளவிற்கு என் வீட்டில் வசதியில்லை. படிக்க ஆர்வம் இருந்தும் என்னால் மேற்கொண்டு படிக்க இயலவில்லை.

இந்நிலையில் எங்களது ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. அதன் மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டது. அந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் புத்தகப் பராமரிப்பாளராக நான் தேர்வு செய்யப்பட்டேன். இந்தப் பணிக்காக வழங்கப்பட்ட மதிப்பூதியத்தைச் சிறுகச் சிறுகச் சேமித்தேன். இந்நிலையில், என் மேற்படிப்பு ஆசை மீண்டும் துளிர் விடத் தொடங்கியது. புத்தகப் பராமரிப்பாளர் பணிக்கு எனக்கு வழங்கப்பட்டு வந்த மதிப்பூதியத்தின் மூலம் பகுதி நேர பி.காம்., படிப்பை இராமநாதபுரம் அரசு கலைக் கல்லூரியின் வாயிலாகப் படித்து முடித்தேன்.

இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் உதவியால் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகர் மூலம் எனக்கு மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் கிடைத்தது. இப்பொழுது நான் எம்.காம்., படிப்பை (பகுதி நேரம்) இராமநாதபுரம் அரசு கலைக்கல்லூரியில் தொடர்ந்து பயின்று வருகின்றேன். ■

– செல்வி. ஆர். பாண்டியம்மாள், குமுக்கோட்டை ஊராட்சி

“என் வாழ்க்கையில் கல்விக்கு உதவி செய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத் திற்கு என் மனமார்ந்த நன்றி. இனிமேல் எனக்கு ஒரு நல்ல எதிர்காலம் உள்ளது என்ற நம்பிக்கை வளர்ந்து கொண்டிருக்கிறது.”

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு...!

இராமநாதபுரம் மாவட்டம், காமன்கோட்டையில் சுமார் 100 இலக்கு மக்கள் குடும்பங்கள் பால் மாடு தொழில் செய்து வந்தோம். கந்து வட்டிக்காரர்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கி தொழிலைச் செய்து தனியார் பால் பண்ணையில் பாலை விற்பனை செய்து பிழைத்து வந்தோம். பால் விற்று கிடைத்த பணத்தில் வாங்கிய கடனுக்கு வட்டியை மட்டுமே செலுத்தி, அடிமைகள் போல் வாழ்ந்து வந்தோம். இந்த நேரத்தில் எங்கள் ஊருக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் நாங்கள் பல பயிற்சிகள் பெற்றோம்.

எங்கள் ஊருக்கு ஏற்ற பால் தொழிலைத் தேர்வு செய்து 22 நபர்கள் ஒன்றிணைந்து காமன்கோட்டை பால் பண்ணைத் தொழில் குழுக் கூட்டமைப்பை ஏற்படுத்தினோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ரூ. 7,82,187/– கடன் பெற்று பால் மாடுகள் வாங்கி வளர்த்து பால் கறந்து உள்ளூரில் ரூ. 15/–க்கு 1 லிட்டர் பாலினை விற்பனை செய்து வருகிறோம். கால்நடைத் தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் போக உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ. 3000/– வரை வருவாய் கிடைத்து வருகிறது. ■

காமன்கோட்டை பால் பண்ணைத் தொழில்குழுக் கூட்டமைப்பு, இராமநாதபுரம்.

வெற்றிகரமான கரிமூட்டத் தொழில் கூட்டமைப்பு

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியம், தீயனூர் கிராமத்தில் கரிமூட்டத் தொழில் கூட்டமைப்பு செயல்படுகின்றது. தனிநபராய், கரிமூட்டத் தொழில் செய்யும்பொழுது முதலீடு அதிகம் தேவைப்பட்டது. மேலும் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது சிரமமாய் இருந்தது.

இத்தொழில் செய்யும் 18 நபர்கள் ஒன்றிணைந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் தொழில் கரிமூட்டத் தொழில் கூட்டமைப்பை உருவாக்கிப் பயிற்சிகள் பலவும் பெற்றனர். வங்கியில் சுழல் நிதியாகப் பெற்ற ரூ. 60,000/– மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் கடனாகப் பெற்ற ரூ.40,000/– ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு, கரி மூட்டத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் பெற்ற கடனுக்கு தவணைத் தொகை கட்டியது போக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 3000/– வரை மாதந்தோறும் இலாபம் கிடைக்கிறது.

மேலும் இக்கரி மூட்டத்தின் மூலம் கிடைக்கும் கரிக்கு, மதிப்புக் கூட்டும் வகைளில் செயல்பட்டு அதிக இலாபத்திற்கு விற்பனை செய்ய த்திட்டமிட்டுள்ளனர். மேலும் இக்கூட்டமைப்பின் மூலம் தேவையான மருத்துவ பரிசோதனைகளும் உறுப்பினர்களுக்கு செய்யப்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பு இப்போது இலாபத்தில் செயல்படும் கூட்டமைப்பில் ஒன்றாகத் திகழ்கின்றது. ■

> வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ், தொழில் கூட்டமைப்பை உருவாக்கி பயிற்சிகள் பலவும் பெற்றனர். வங்கியில் சுழல் நிதியாகப் பெற்ற ரூ. 60,000/– மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் கடனாகப் பெற்ற ரூ. 40,000/– ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு, கரி மூட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய ஒளி...!

இலக்கு மக்கள் வாழ்விலே
புதிய ஒளி பிறக்குது!
அதற்குக் காரணம் யாரம்மா
வறுமை ஒழிப்புச் சங்கம் தானம்மா!!

முன்னேற்றம் வளருது
இலக்கு மக்கள் வாழ்விலே!
சந்தோஷம் தெரியுது
இலக்கு மக்கள் முகத்திலே!!

முன்னுரிமை கிடைக்குது
சுய உதவிக் குழுவிற்கே!
மாற்றுத் திறனாளி வாழ்விலே
மறுமலர்ச்சி மலருது!!

சகோதரத்துவம் வளருது
சாதி வேற்றுமை ஒழியுது!
அதற்குக் காரணம் யாரம்மா
வறுமை ஒழிப்பு சங்கம்தானம்மா!!

– திருமதி. எல். வனசங்கரி,
சமுதாய பயிற்றுநர், அச்சங்குளம்,
அபிராமம் களப்பகுதி

தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

மாநில சுற்றுப்புறச் சூழல் ஆதார அமைப்பின் செய்தி மடல்

வறுமையில் சுற்றுச்சூழலின் நிலை

சுற்றுப்புறச் சூழ்நிலை வளர்ச்சியின் முன்னேற்றம்

வளர்ச்சிக்கு ஆதாரமான சுற்றுப்புறச் சூழ்நிலை

வாழ்விற்கும், வாழ்வாதாரத்திற்கும் வேண்டிய அடிப்படை வளங்கள் இயற்கையைச் சார்ந்துள்ளது. சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள், மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், போக்குவரத்திற்கான எரிபொருட்கள் இவை அனைத்தையும் இயற்கையை நமக்கு அளித்து, வளர்ச்சிக்குத் துணை புரிகின்றது. வளர்ச்சிக்குத் தேவையான தொழில்கள் முனையும் போது உருவாகும் கழிவுப் பொருட்களை சுற்றுச்சூழலே உட்கிரகித்துக் கொள்கிறது.

கிராமத்தில் உள்ள ஒரு குளத்தினை எடுத்துக்காட்டாகக் கொள்வோமானால், அதிலிருந்து பாசனம் மற்றும் கால்நடை உபயோகத்திற்கான தண்ணீர், வாழ்வாதாரத்திற்கான மீன் வளங்கள் போன்றவை கிடைக்கின்றன. அதே சமயம் துணிகள் துவைப்பதன் மூலமும், மழைக் காலங்களில் விவசாய நிலங்களிலிருந்து வரும் பூச்சிக்கொல்லி மற்றும் உரங்களின் வேதிப்பொருட்கள் ஆகியவை கலந்து குளத்து தண்ணீரை மாசுபடுத்துகின்றன.

எவ்வகை மக்கள் இயற்கையைச் சார்ந்து உள்ளார்களோ, அதே வழியில் மக்களின் வாழ்க்கைத்தரம் அமைகிறது. அதிகப்படியான கழிவுப் பொருட்களைச் சுற்றுச்சூழலில் வெளிவிடுவதால், சுற்றுச்சூழல் மாசு அடைகிறது. இதன் விளைவுகள் மக்களைப் பாதிக்கிறது.

மாசுபட்ட சூழல் வளர்ச்சிக்களுக்குத் துணை புரியாது

வளங்களை அளிக்காத சுற்றுச்சூழலால், வாழ்வாதாரம் மற்றும் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக இயற்கையாகக் கிடைக்கக் கூடிய தீவனங்கள் சரிவரக் கிடைக்காத விளைவுகளினால் பாலின் உற்பத்தி குறைவதோடு, அதைச்சார்ந்த மக்களின் வாழ்வாதார நிலை பாதிக்கப்படுகிறது. மாசு அடைந்த சுற்றுச்சூழலில், வளங்களைத் சேகரிப்பதற்காக மக்கள் செலவிடும் நேரம் அதிகமாக இருப்பதால் வளர்ச்சிக்குத் தேவையான தொழில்களைச் செய்ய முடியவில்லை.

அதேபோல, மாசுபட்ட சூழலினால் மக்களின் வளர்ச்சிக்கான திறன் குறைகின்றது. அதுமட்டுமின்றி வளர்ச்சிக்கான செலவினம் அதிகரிப்பதோடு நேரமும் விரையமாகிறது. எடுத்துக்காட்டாக, கழிவுப் பொருட்களை முறையாகக் கையாளாததால் நோய்கள் பரவும் வாய்ப்புகள் அதிகரித்து வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் பரவுகின்றன. இந்நோய்களால் மக்களின் மருத்துவச் செலவுகள் அதிகரிப்ப தோடு, உழைக்கும் மக்களின் வருமானமும் குறைகின்றது.

சுற்றுச்சூழலும் வறுமையும்

சுற்றுச்சூழலுக்கும் வறுமைக்கும் நெருங்கிய பந்தம் உண்டு. ஏழைகளின் வாழ்வாதாரச் சொத்துக்களாக விவசாயம், செம்மறி ஆடு வளர்ப்பு, வனப்பொருட்கள் சேமித்தல் ஆகிய இயற்கை வளங்களே உள்ளன. மற்றவர்களை விட, ஏழை மக்களே மிக அதிகமாகவும், நேரடியாகவும் இயற்கையைச் சார்ந்துள்ளனர். (எ.கா.) விறகு சேகரித்தல், குளிக்கவும் துவைக்கவும் பொது நீர்நிலைகளைப் பயன்படுத்துதல்.

இயற்கை வளங்கள், ஏழை மக்களுக்கு இக்கட்டான சூழ்நிலைகளைக் கையாள, வேறுபட்ட உற்பத்தியினைத் தந்து உதவுகிறது. ஏழைகள் தங்கள் வருமானத்தினை அந்தந்த காலத்திற்கேற்ப வேம்பு விதைகள் சேகரித்தும், நெல்லிக் கனிகளை சேகரித்தும் பயன் பெறுகின்றனர்.

இயற்கை சீற்றங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது ஏழை மக்களே. (எ.கா.) வறட்சி ஏற்பட்டால் விவசாயம் பாதிக்கப்பட்டு, சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ■

(தொடரும்)

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (51,000 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD, New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

இனி ஒரு விதி செய்வோம்!

எச்.ஐ.வி. உள்ளவர்களும்
நம்மைப் போன்ற மனிதர்களே
அவர்களுக்கும்
வளர, வாழ, படிக்க, பழக
உரிமை உண்டு

உரிமை காக்க
உடன் நிற்போம்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

தொலைபேசி : 044-2819 0891, 2819 0467

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2435/2010
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11

தமிழ்நாடு மகளிர்
நல மேம்பாட்டு நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்.
"முற்றம்" படியுங்கள், பாதுகாத்து வையுங்கள், சந்தாதாரர் ஆகுங்கள், முற்றத்தில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

வானவில்லின் வர்ணஜாலம்!
வாங்கி மகிழ இது நல்ல காலம்!!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விளம்பரக் கட்டணம் (கலர்)

பின் அட்டை	ரூ. 25,000/-
அட்டை இரண்டாம் பக்கம்	ரூ. 20,000/-
அட்டை மூன்றாம் பக்கம்	ரூ. 20,000/-
உட் பக்கம்	ரூ. 20,000/-
அரைப் பக்கம்	ரூ. 10,000/-
கால் பக்கம்	ரூ. 5,000/-

(விளம்பரக் கட்டணத்தில் குழுக்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகை)

சந்தாக் கட்டணம்

1 ஆண்டு சந்தா	ரூ.	100/-
2 ஆண்டு சந்தா	ரூ.	150/-
3 ஆண்டு சந்தா	ரூ.	250/-
4 ஆண்டு சந்தா	ரூ.	300/-
ஆயுள் சந்தா	ரூ.	600/-
புரவலர் கட்டணம்	ரூ.	15,000/-

"முற்றம்" மகளிர் மாத இதழ் www.tamilnaduwomen.org/mutram

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை - 600 032

தொலைபேசி - 044 -42085804, 4202 7635
4208 5806, நிகரி - 044 - 22352751
wdcmutram@yahoo.com, wdcmutram@gmail.com